NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p2
**Date:** 13 June 2015

# ஊழியர்களுக்குக் கெட்டுப்போன உணவு; அதிலும் பற்றாக்குறை

குறைந்தது பத்தில் ஒன்பது பங்ளாதேஷி ஊழியர்களுக்கு சுத்தமில்லாத, சுகாதாரமற்ற உணவே விற்பனையாளர்களால் வழங்கப்படுவதாக ஆய்வு ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. பலருக்கு போதுமான உணவும் வழங்கப்படுவதில்லை எனப் புகார் தெரிவிக்கப்பட்டதாக 500 ஊழியர்கள் பங்கேற்ற சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு தெரிவிக்கிறது. அவர்களிடையே சம்பளப் பிரச்சினை மோசமானதாக இருக்கும் என எண்ணி ஆய்வு நடத்தியதாகவும் உணவுப் பிரச்சினையே மோசமானதாக இருப்பதை அறிந்ததாகவும் பேராசிரியர் மோகன் ஜே. தத்தா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தேசியப் பல்கலைக்கழகத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஈராண்டு ஆய்வுத் திட்டப்பணியின் அங்கமாக வெளிநாட்டு ஊழியர்கள் எதிர்நோக்கும் உணவுப் பிரச்சினைகளைக் கோடிட்டுக் காட்டுவதற்கான விழிப்பு உணர்வுப் பிரசாரம் நேற்றுத் தொடங்கியது. தொலைக்காட்சி விளம்பரம், பேருந்து, 'எம்ஆர்டி' விளம்பரங்கள், 10 நிமிட ஆவணப்படம் ஆகியன இந்தப் பிரசாரத்தில் அடங்கும்.

தவிர, 195 வீட்டுப் பணிப்பெண்களிடையே நடத்திய ஆய்வில் வாராந்திர விடுப்பு தினத்தில் பணிபுரிவதற்கான சம்பளம் தரப்படுவதில்லை என பத்தில் நால்வர் குறிப்பிட்டுள்ளதாக மற்றொரு ஆய்வில் தெரியவந்துள்ளது. ஆய்வில் பங்கேற்ற 20 பேர் வாராந்திர விடுப்பு அளிக்கப்படுவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளனர். இந்த ஆய்வு 2013ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்கும் கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.